18th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : (ஜில்லா போர்ட்) கழகப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப்போன்று தீபாவளி அட்வான்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி என்னிடம் எந்த விவரமும் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஜில்லா போர்ட் சட்டபூர்வமாக மறைந்து விட்டது. இப்படி டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்பது இல்லாமல் இருந்தும், அரசாங்கம் இன்னும் அந்தப் பள்ளிகளை எல்லாம் ஏன் ஏற்று நடத்தாமல் இருக்கின்றன? ஆகவே அவற்றை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய அபிப்பிராயம் முடிவில் இந்தப் பள்ளிகள் எல்லாம் அரசாங்கத்தின் கிழ் வரும் என்பதுதான். இப்போது இதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். மாவட்ட கழகத்தின் கிழ் நடக்கும் பள்ளிகளை எடுத்துக்கொண்டால் அவைகளுக்கு பலர் உதவி செய்திருக்கிறார்கள். பலர் அதில் அக்கரை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் கடைசியில் இது அரசாங்க பள்ளிகளாகவே வரும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

* 247 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the employees of the High Schools of the erstwhile District Boards have since been taken over by the Government as Government servants; and

(b) if so, whether they are given the same privileges as given to the employees of the Government High Schools ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

* 248 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is fact that the Teachers of Secondary Schools of the erstwhile District Boards are not treated on a par with the teachers of the Government High Schools; and

(b) if so, whether the Government will take steps to remove the said disparity ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (a) Yes, though the scales of pay are generally the same the rules governing their services are different.

(b) At present the Government have decided to treat the erstwhile District Board Secondary Schools as a separate category and have appointed Special District Educational Officers to administer them. The question of equating the teachers of these schools with those of the Government Schools does not, therefore, arise now.

[18th November 1963

சர்க்கரை

* 249 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சீனி கண்ட்ரோல் முறையை ரத்து செய்ய உத்தேச முண்டா?

(இ) ஆமெனில் எப்போது?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: (a) & (b) The order was issued by the Government of India in exercise of the powers conferred by the Defence of India Rules. The State Government are not aware of any proposal to cancel the order.

* 250 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகளில் 1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் உற்பத்தியான சர்க்கரையின் மொத்த அளவு என்ன?

(இ) மொத்த உற்பத்தியில் வெளியிடங்களுக்கு முறையே அனுப்பப்பட்ட சர்க்கரையின் அளவு என்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:

	During 1961–62 (in Tonnes.)	During 1962–63 (in Tonnes.)
(a)	1,27,387 (November 1961 to October 1962.)	85,707 (November 1962 to May 1963 only.)
(b)	27,057	8,679

திரு. கரு. சீமைச்சாமி: இப்போதுள்ள நிலைமையில் சீனி வாங்க வேண்டுமென்றால் கள்ளமார்க்கட்டில் போய்தான் வாங்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி கள்ளமார்க்கட்டைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்த கண்ட்ரோல் முறை நீடிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நான் முந்திய கேள்வியில் சொன்ன பதில் தான் இதற்கும் பொருந்தும்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, நம் நாட்டில் உற்பத்தியாகிற சர்க்கரை நம் நாட்டுக்கு போதிய அளவு இருந்தும், கண்ட்ரோலை இந்த நாட்டில் வைத்துவிட்டு, சர்க்கரையை வெளியே அனுப்புவதின் நோக்கம் என்ன என்பதை அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: நமக்கு வெளியில் சர்க்கரை அனுப்பும் போது நல்ல பணம் கிடைக்கிறது. நமக்கு வேண்டிய சர்க்கரைப் போக பாக்கியைத்தான் வெளியே அனுப்புகிறோம்.